ஹர ஹர சங்கர
வேதோ (அ)கிலோ தர்ம மூலம்

உ
ஸ்ரீ மஹா பெரியவா பாதமே சரணம்

ஜய ஜய சங்கர
வேதோ நித்யம் அதீயதாம்



# ஸ்ரீ மஹா பெரியவா 129 ஆவது ஜயந்தி மஹோத்ஸவம்
# ஸ்ரீ க்ருஷ்ண யஜுர் வேத ஸம்பூர்ண கன பாராயண வைபவம்

**17.05.2022, வைகாசி 3 ஆம் தேதி முதல் 16.06.2022, ஆனி 2 ஆம் தேதி வரை 30 நாட்கள்**

**ஸ்ரீ மஹா பெரியவா பரிபூரண குருவருளுடன்** உலக நன்மைக்காகவும், இயற்கைச் சீற்றங்களால் ஜீவராசிகள் துன்பப்படாமல் தருணத்தில் மழை பொழிந்து எல்லா வளமும் செழிக்கவும் ஸ்ரீ மஹா த்ரிபுர சுந்தரி ஸமேத ஸ்ரீ சந்த்ரமௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞ பீடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீஸ்ரீஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன் **ஸ்ரீ மஹா பெரியவா 129 ஆவது ஜயந்தியை (13.06.2022)** முன்னிட்டு **ஸ்ரீ க்ருஷ்ண யஜுர் வேத ஸம்பூர்ண கன பாராயண வைபவம்** ப்ரஹ்மஸ்ரீ **கோபால கனபாடிகள்** அவர்கள் தலைமையில் **14 வேத விற்பன்னர்கள் (கனபாடிகள்)** பங்கேற்று திருவையாறு அருகில் உள்ள **அம்மாள் அக்ரஹாரம் கிராமத்தில் ஸ்ரீ தியாகய்யா பவனத்தில் 17.05.2022, வைகாசி 3** ஆம் தேதி முதல் **16.06.2022, ஆனி 2** ஆம் தேதி வரை **30 நாட்கள்** வெகு விமரிசையாக நடைபெற உள்ளது. ஆஸ்தீக பெருமக்கள் குரு கைங்கர்யத்தில் கலந்து கொண்டு, வேத பாராயணத்தையும் கேட்டுவாழ்வாங்கு வாழுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வேதம் அநாதியானது. அபௌருஷேயமானது. சகல தர்மங்களுக்கும் மூலம் வேதம்தான். வேதோ (அ)கிலோ தர்ம மூலம்

வேதத்தின் மகிமை என்ன என்றால் சப்தத்தின் மந்திர சக்தி, அர்த்தத்தின் கௌரவம் என்ற இரண்டும் கொண்ட மந்திர சமூகமாக அது இருப்பதுதான். அதன் சப்தம் நம்முடைய நாடிகளிலும், வெளி லோகத்திலும் ஏற்படுத்தும் சலனங்களால் ஆத்ம க்ஷேமமும், லோக க்ஷேமமும் உண்டாகிறது. லோக க்ஷேமம் என்றால் மநுஷ்யர்களின் க்ஷேமம் மட்டுமில்லை. ஸகல பிராணி வர்க்கங்களும் நன்றாக இருக்கவேண்டும் என்று வேதம் சொல்கிற மாதிரி வேறெந்த மதத்திலும் சொல்லியிருக்க வில்லை. "தே த்விபாத் சதுஷ்பாத்" – இரு கால் பிராணி, நாலுகால் பிராணி எல்லாம் க்ஷேமமாக இருக்க வேதம் ப்ரார்த்திக்கிறது. புல், பூண்டு, விருக்ஷம், மலை, நதி ஆகிய எல்லாவற்றின் நன்மையையும் கோருகிறது. இந்த ஸமஸ்தப் பிராணிகளின் க்ஷேமம் வேதத்தின் சப்த விசேஷத்தாலேயே நடந்து விடுகிறது.

வாக்ய பாடம் அல்லது ஸம்ஹிதா பாடம் என்பதுதான் மந்திரங்களை உள்ளபடி அப்படியே பாடம் பண்ணுவது. ஸம்ஹிதா பாடத்திற்கு அடுத்தது பத பாடம். அதற்கு அடுத்தது க்ரம பாடம். பின் அஷ்டவிக்ருதி என்ற இந்த எட்டு விதமான பாடங்களின் பெயர்களையும் ஒரு ச்லோக ரூபமாக சொல்வதுண்டு. ஜடாமாலா சிகாரேகா த்வஜோதண்டோ ரதோ கன: இத் யஷ்டவிக்ருதய: ப்ரோக்தா, க்ரம: பூர்வாமஹர்ஷிபி :
இதில் ஒன்றை விட இன்னொரு தினுசில் அத்யயனம் பண்ணுவதற்கு பலனும் இத்தனை மடங்கு ஜாஸ்தி என்று கூடச் சொல்வதுண்டு.
ஸம்ஹிதா பாட மாத்ரேண யத் பலம் ப்ரோச்யதே புதை:। பதேது த்விகுணம் வித்யாத் க்ரமேது ச சதுர்குணம் । வர்ண க்ரமே சதகுணம் ஜடாயந்து ஸஹஸ்ரகம் ।

(ஸம்ஹிதா பாடத்தை விட இருமடங்கு பலன் கொண்டது பத பாடம்; நான்கு மடங்கு பலனளிப்பது க்ரம பாடம்; நூறு மடங்கு பலன் வாய்ந்தது வர்ண க்ரமம் என்ற பாடமுறை ஆயிரம் மடங்கு பலனளிப்பது ஜடா பாடம். கன பாராயண பலனுக்கு எண்ணிக்கை இல்லை.

வேதத்திற்கு கௌரவம் என்னவெனில் எந்த உயர்ந்த நூலானாலும் இது வேதத்திற்கு சமானம் என்று சொல்வதுதான்.

ராமாயணம் மிகவும் பிரசித்தமானது. அப்படிப்பட்ட ராமாயணத்தின் கௌரவத்தைச் சொல்லவந்தபொழுது அது வேதம் என்றே சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மனா

மஹாபாரதத்துக்கும் வேதம் என்று பெயர் சொல்லப்படுகிறது. நாலு வேதங்களுக்குப் பிறகு இதை ஐந்தாவது வேதமாக வைத்து பஞ்சமோ வேத: என்று கொண்டாடுகிறார்கள்.

ஞானஸம்பந்தர் தம்மை நான்மறை ஞானஸம்பந்தன் என்று சொல்லிக் கொள்கிறார். நாலு வேதங்களையும் அத்யயனம் பண்ணினவர் அவர். அம்பாளின் க்ஷீரத்தைப் பானம் பண்ணினவராதலால், அவருக்கு ஸகல வேதங்களும் உடனே தெரிந்திருக்கும்.

வேதங்களை தேவதைகளின் ஸ்வரூபமாகவே சொல்லியிருப்பதால் அக்ஷர லோபமின்றி, ஸ்வர லோபமின்றி அதுக்குத் தகுதியுள்ள அதிகாரிகள் பாராயணம் செய்வதால்தான் பலன் சித்திக்கும்.

இப்படி காலம் சொல்ல முடியாமல் நம் தேசம் முழுவதிலும் உறைத்து உறைத்து நம்முடைய மஹத்தான கலாசாரத்துக்கு ஜீவ சத்தாக ஊறிப் போயிருக்கிற வேத நிதியை, நம்முடைய அஜாக்ரதையால் இனிமேல் இல்லை என்று ஆகும்படியாகச் செய்துவிடக் கூடாது. ஹிந்துவாகப் பிறந்த ஒவ்வொருத்தனுக்கும் இதைவிடப் பெரிய பொறுப்பு எதுவும் இல்லை.

வேத சப்தம் பிரகாசிக்க வேண்டும்; வேத அர்த்தம் பிரசாரமாக வேண்டும்; வைதிக அநுஷ்டானங்கள் புது ஜீவனைப் பெற்றுத் திகழவேண்டும். நம்முடைய ஒரு தேசத்திலே இப்படி ஏற்பட்டுவிட்டால் போதும். ஒருத்தனுடைய ஹ்ருதயம் பலமாக இருந்து விட்டால் மற்ற அவயவங்களுக்கு எத்தனை வியாதி வந்தாலும் அவன் பிழைத்துக் கொள்கிற மாதிரி, லோகத்திலுள்ள அத்தனை தேசங்களுமே நல்ல வழிக்கு வந்து, ஸமஸ்த ஜனங்களும் க்ஷேமமாக இருப்பார்கள். வேத தர்மம் பிரார்த்தனை பண்ணுவதும் இதைத்தான்.

லோகா: ஸமஸ்தா: ஸுகிநோ பவந்து ! வேதம் ஓதிய வேதியர்க்கோர் மழை. வையகமும் துயர் தீர்கவே ! – *தெய்வத்தின் குரல்*

गणपारायणं यस्तु सकृत् कुर्यात् द्विजोत्तमः। स वै ब्रह्मा स वै विष्णुः स वै रुद्रो न संशयः॥

கன பாராயணம் யஸ்த்து குர்யாத் த்விஜோத்தம:। ஸ வை ப்ரஹ்மா: ஸ வை விஷ்ணு: ஸ வை ருத்ரோ ந ஸம்ஸயஹ:||

An Eminent Vedic Scholar who even once does Ganaparayanam, He is undoubtedly, The Lord Brahma, The Lord Vishnu and The Lord Rudra.

தினமும் காலை 7.15 மணிக்கு **குருவந்தனம்** காலை 8.00 மணி முதல் 12.00 வரை **பாராயணம்**
மாலை 3.30 முதல் 5.30 வரை **பாராயணம்** மாலை 6.30 முதல் இரவு 8.00 வரை **பாராயணம்**

தினமும் **புராண ப்ரசவசனம் : ஸ்ரீ வைஸம்பாயனர்**

வெளியூரிலிருந்து வரும் அன்பர்கள் தங்கள் வருகையை முன்கூட்டியே மேலே உள்ள நம்பருக்கு வாட்ஸ்ஆப்-ல் தெரிவிக்கவும்.

இப்படிக்கு,
**ஸ்ரீ சரணாகதம் டிரஸ்ட்**
**Contact Number : 86675 81170. Shri Sharanagatham Trust**
**City Union Bank - SB Account Number : 500101012729466 - IFSC CIUB0000190**
**Kindly Send your Address details to Shrisaranagatham@gmail.com for sending Prasadam**

ஸ்ரீ மஹா கணபதி பிரிண்டர்ஸ், நேரு வணிக வளாகம், சாலைத் தெரு, அய்யம்பேட்டை. செல் : 9994262998